*கவனிக்க .- 2015.04.10 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1911 - 2015 අප්‍රේල් මස 17 වැනි සිකුරාදා - 2015.04.17

*1911 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 720 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 731 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** அரசியலமைப்புக்கான இருபத்தி நான்காவது திருத்தச் சட்டமூலம் 2015, மாச்சு மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, மே மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## பலப்பிட்டிய பிரதேச சபை

தென் மாகாண அரச சேவையில் பலப்பிட்டிய பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள வேலைக்கள ஊழியர் சுகாதார ஊழியர் மற்றும் சவச்சாலை இயக்குநர் வெற்றிடங்களுக்காக உரிய தகைமைகளைக் கொண்ட தென் மாகாண சபை அதிகார பிரதேசத்தின் நிரந்தரமாக வசிக்கும் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| 2. பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | ஆகக் குறைந்த கல்வித் தகைமை |
|---|---|---|---|
| வேலைக்கள ஊழியர் | 1 | பொ.நி.சு 06/2006 (IV) படி PL - 1,2006A ரூ. 11,730-10×120-10×130-10×145- 12×160-ரூ. 17,600. | 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| சுகாதார ஊழியர் | 2 | பொ.நி.சு 06/2006 (IV) படி PL - 1,2006A ரூ. 11,730-10×120-10×130-10×145- 12×160-ரூ. 17,600. | 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| சவச்சாலை இயக்குநர் | 1 | பொ.நி.சு 06/2006 (IV) படி PL - 2,2006A ரூ. 12,210-10×130-10×145-10×160- 12×170-ரூ. 18,600. | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் பதவிக்காக குறிப்பிட்டுள்ளபடி திறமை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் நடைமுறைப் படுத்தும் தேசிய தொழிற்சார் தகைமைகளில் (N. V. Q.) குறைந்தபட்சம் இரண்டாவது மட்டத்திலாவது திறமை பெற்றிருத்தல். |

**3. தேவையான மற்றைய தகைமைகள்:**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போதும் அரச சேவையில் அனுபவமிருத்தல் மற்றும் ஒரு தகைமையாகக் கருதப்படும் மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் உச்ச வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. அவர்கள் உரிய திணைக்களத் தலைவர் மூலம் தமது விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னராக 3 ஆண்டுகள் தென் மாகாண சபை அதிகார பிரதேசத்திற்குள் தொடர்ந்து வசிப்பவராக இருத்தல் வேண்டும்;

(iv) விண்ணப்பதாரி சீரிய நடத்தையும் சிறந்த தேகாரோக்கியமும் கொண்டிருத்தல் ;

(v) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றினால் குற்றவாளியாக கருதப்பட்டு தண்டனைக்கு உட்படாதவராயிருத்தல் வேண்டும்;

(vi) குறித்த வேலையில் அனுபவம் பெற்றிருத்தல் விஷேடமாக கவனிக்கப்படும்;

(vii) விண்ணப்பதாரி அப்பதவிகளின் முன்னால் காட்டப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

**4. சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும்;

(ii) பலப்பிட்டிய பிரதேச சபையில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் தற்காலிக/அமைய/பயிலுநர்/ஒப்பந்த சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு விஷேட கவனம் செலுத்தப்படும்;

(iii) இப்பதவி 3 வருட கால தகுதி காண் காலத்தைக் கொண்டது;

(iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் மற்றும் நிதிச் சட்டக்கோவை விதி முறைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அலுவலகக் கோவை விதிகளுக்கும் நிதி நிபந்தனைகளுக்கும் மற்றும் அரச திணைக்களக் கட்டளைச் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கும் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழு மற்றும் பலப்பிட்டிய பிரதேச சபையினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உடன்பட்டு செயற்படுதல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பதாரிகள் குறித்த நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகைமைகளைப் பரீட்சித்தும் மேலும் குறித்த ஆட்சேர்ப்பு விதிமுறை இணைப்பு இல. 1 இன் படி கீழே குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆகக்கூடிய புள்ளிகளின் படி சேர்த்துக்கொள்ளப்படுவர்.

| | புள்ளிகளைப் பெற்றுத்தரும் பிரதான தலைப்புக்கள் | உச்ச புள்ளி அளவு | தெரிவுசெய்யப்படுவதற்கு கவனிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளியளவு |
|---|---|---|---|
| 1 | கல்வித் தகைமைகள் | 30 | |
| 2 | ஏனைய தகைமைகள் (அட்டவணை 2 இன் படி ஏற்றதாயின்) | 10 | |
| 3 | அனுபவம் (அட்டவணை 2 இன்படி ஏற்றதாயின்) | 10 | 50% |
| 4 | சபையின் அதிகார பிரதேசத்திற்குள் வசிப்பவர் ஒரு வருடத்துக்கு 5 புள்ளிகள் படி | 45 | |
| 5 | நேர்முகப் பரீட்சயின் போது வெளிப்படுத்தப்படுகின்ற திறமைகள் | 05 | |
| | மொத்தம் | 100 | |

**குறிப்பு**:-

(1) தகைமைகள் பரீட்சித்தல் உள்வாரியான நேர்முகப் பரீட்சையின் போதே நடாத்தப்படும் ;

(2) ஆரம்ப தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளில் உள்வாரியான நேர்முகப் பரீட்சையின்போது பெறப்பட்ட புள்ளிகளின் திறமை விகிதப்படி முறையே வெற்றிடங்களின் எண்ணிக்கைகளுக்கேற்ப பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் 12" × 8" அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்டு 2015.05.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "தவிசாளர் பலப்பிட்டிய பிரதேச சபை பலப்பிட்டிய" என முகவரியிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். காட்டப்பட்டுள்ள விதிகளுக்கு மாறான பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்த விதமான அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

7. இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அக்கால கட்டத்தில் அல்லது இவ் ஆட்சேர்ப்பு கால தாமதமாதல் அல்லது மாற்றங்கள் செய்தல் மற்றும் இவ் அறிவித்தலை இரத்துச் செய்தல் போன்ற அதிகாரங்கள் பலப்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளரைச் சாரும். தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது பொருத்தப்பாடின்மை அல்லது விலக்கமின்மை காணப்படின் சிங்கள மொழி பெயர்ப்பிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய செயலாற்றப்படும்.

ஏ. தயாரத்ன த சில்வா,
தவிசாளர்,
பலப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பலப்பிட்டிய.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**பலப்பிட்டிய பிரதேச சபை**

***தென் மாகாண அரச சேவையில் பலப்பிட்டிய பிரதேச சபையில் ............................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்***

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
   (ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
3. பிரதேச செயலாளர் பிரிவு :----.
4. நிரந்தர முகவரி :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.
6. பால் :----.
7. பிறந்த திகதி :
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
9. இலங்கைப் பிரசையாவது பரம்பரையாகவா? பதிவின் மூலமாகவா? :----.
10. கல்வித் தகைமைகள்: (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) (சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைக்கவும்) :----.
11. தொழில் மற்றும் வேறு தகைமைகள் : (சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைக்கவும்) :----.
12. விண்ணப்பதாரி தற்போது சேவை ஒன்றில் ஈடுபட்டுள்ளாராயின் :-
    (i) பதவி :----.
    (ii) சேவை புரியும் இடம் :----.
    (iii) நியமனத் திகதி :----.
13. நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டு ஒன்றிற்காக நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.
14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகின்றேன். இவ்வாட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கு அமைய என்னால் பிழையான தகவல் ஏதும் தரப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்படுமாயின் பதவி நியமனத்திற்கு முன்னராயின் தகைமை இழப்பிற்கும் பதவி நியமனத்திற்கு பின்னராயின் பதவி நீக்கத்திற்கும் உள்ளாக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

***அரசாங்க மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்***

இவ் விண்ணப்பதாரி தற்போது இந் நிறுவனத்தில் /திணைக்களத்தில் சேவையாற்றுகிறார். அவரது கடமையும் நடத்தையும் திருப்திகரமானது எனவும் அவருக்கு இந்நியமனம் கிடைக்கப்பெற்றால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்கவும் முடியும்/முடியாது எனவும் சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

-----,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

திகதி :----.

4-511

## கடுகண்ணாவை நகர சபையில் ஆரம்பத் தரத்தில் தேர்ச்சியற்ற நிறுவகப் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்

கடுகண்ணாவை நகர சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைக் கொண்டுள்ள கடுகண்ணாவ நகர சபையின் நிருவாக எல்லைக்குள் மற்றும் கண்டி மாவட்டத்தின் கடுகண்ணாவை நகர எல்லையை அண்டிய உள்ளூராட்சி சபைகளின் நிருவாக எல்லைக்குள் வசிப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.

| பதவிப்பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பளக் குறியீடும் சம்பள அளவுத்திட்டமும் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|
| வேலை/ வெளிக்களத் தொழிலாளர் | 2 | சம்பளக் குறியீடு PL-1-2006 A சம்பள அளவுத் திட்டம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 முதல் நியமனத்திலிருந்து ரூபா 11,730 ஆரம்பச் சம்பளத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும். (4 ஆவது படியேற்றத்துக்கு வர முன்னர் தடைதாண்டல்) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இவற்றில் ஒரு அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| ஆயுர்வேத மருந்தக தொழிலாளர் | 1 | சம்பளக் குறியீடு PL-1-2006 A சம்பள அளவுத் திட்டம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 முதல் நியமனத்திலிருந்து ரூபா 11,730 ஆரம்பச் சம்பளத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும். (4 ஆவது படியேற்றத்துக்கு வர முன்னர் தடைதாண்டல்) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இவற்றில் ஒரு அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-**

3.1 இந்தப் பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதிய உரித்துடையவையுமாகும்;

3.2 விதவைகள் மற்றும் அநாதைகள் சகாய நிதிக்கும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

3.3 3 வருடகால தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும்;

3.4 இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும், மத்திய மாகாண அரச சேவை மற்றும் நகர சபையினால் காலத்துக்குக் காலம் விதிக்கும் ஏனைய நிபந்தனைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்புக்கான ஏனைய தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(2) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் சிறந்த கண்பார்வையைக் கொண்டவராகவும், சிறந்த நன்னடத்தை உடையவராகவும், சிறந்த மனநிலைமையைக் கொண்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தீவின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய உடற் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(3) கடுகண்ணாவை நகர சபையின் எல்லைக்குள் தேவையான தகுதிகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் இல்லாதுபோயின் மட்டுமே அண்டிய நிருவாக எல்லைக்குள் வதிவோரைக் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்;

(4) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது ஏதும் மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிப்போர் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது.);

(5) கடுகண்ணாவை நகர சபையில் தற்போது சமயோசித, பதிலீட்டு, தற்காலிக அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் முன் உரிமை அளிக்கப்படும்;

(6) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையும் நல்ல தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(7) முறையான நேர்முகத் தேர்வின் மூலம் தகுதியானோர் தெரிவுசெய்யப்படுவர்;

(8) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்படாதவராக இருத்தல் கூடாது;

(9) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், தாமதப்படுத்தும் அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் கடுகண்ணாவை நகர சபையின் செயலாளருக்கு உண்டு.

5. **விண்ணப்பிக்கவேண்டிய முறை**.- இந்த விளம்பரத்தில் தரப்பட்டுள்ள மாதிரி ஏ4 அளவு தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2015.05.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கடுகண்ணாவை நகர சபை, கடுகண்ணாவை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் பணிபுரிவோரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.) உரிய திகதியில் கிடைக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்திய பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ்கள் ;
(3) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;
(4) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரது சான்றிதழ் ;
(5) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் ;
(6) அனுபவம், தொழிற் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள்.

டி. எம். பி. கே. திசாநாயக்க,
செயலாளர்,
கடுகண்ணாவை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கடுகண்ணாவை,
2015, ஏப்பிறல் 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவையில் கடுகண்ணாவை நகர சபையின் .................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
6. பிறந்த திகதி :-
   ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.
7. விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளவாறான வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. ஆண்/பெண் :----.
9. விவாகமானவர்/தனித்தவர் :----.
10. வம்சாவழியினாலா அல்லது பதிவினாலா இலங்கைப் பிரசை? :----.
11. கல்வித் தகைமைகள் :----.
12. ஏனைய தகைமைகள் :----.
13. தற்போது இந்தப் பிரதேச சபையில் பணியாற்றுபவராயின்-
   (1) வகிக்கும் பதவி :----.
   (2) நிரந்தர/சமயோசித/தற்காலிக/ஒப்பந்த/பதிலீட்டு அடிப்படையிலா? :----.
   (3) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
14. நீங்கள் எப்போதாயினும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் தகுதியற்றவராக

ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் எவ்வித நட்டஈடுமின்றிச் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் பணியாற்றுவோரது திணைக்களத் தலைவரது சான்றிதழ்**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................................. என்பவர் இந்த நிறுவனத்தில் ............................ ஆக பணியாற்றுகிறார். குறித்த பதவிக்கென அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அவர் எவ்விதமான தண்டனைக்கும் உட்பட்டவரல்ல என்பதை உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தை விதந்துரைத்து முன்வைக்கின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
நிறுவனம் :----.
திகதி :----.

4-617

---

**பொரலஸ்கமுவ நகர சபை**

பொரலஸ்கமுவ நகர சபையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள, மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டுள்ள வதிவிடவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (பொரலஸ்கமுவ நகர சபைப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டுள்ள விண்ணப்பதாரிகளின் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.)

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் | ஆட்சேர்ப்பு செய்யும் முறை | வயது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வியாபார நிலைய கட்டுப் பாட்டாளர் III | 1 | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (iv) இன் பிரகாரம் எம்என் 1 -2006A ரூபா 13,210 - 10 X 145 - 11 X 170 - 10 X 240 - 10×320- ரூபா 22,040 (III ஆவது தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும், II ஆவது தரத்திற்கு தரமுயர்வு பெற்று 03 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும், I ஆவது தரத்திற்கு தரமுயர்வு பெற்று 05 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் | **மட்டுப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு** க. பொ. த. (சா.தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி மற்றும் கணிதம் என்பவற்றுக்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இதில் 05 பாடங்களை ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) **திறந்த விண்ணப்ப தாரிகளுக்கு** 1. மொழி, கணிதம் மற்றும் மேலும் | **உடற் தகைமைகள்** பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல், உள ஆற்றலை கொண்டிருத்தல் வேண்டும். **அனுபவம் :** உள்ளூராட்சி நிறுவனத்தில் பிஎல்-1மற்றும் பிஎல்-2 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற, சேவையில் நிரந்தரப் படுத்தியுள்ள, | **திறந்த/ மட்டுப்படுத்திய** எழுத்துப் பரீட்சை மற்றும் அமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சை மூலம் மட்டுப்படுத்திய விண்ணப்பதாரர்களின் பொருட்டு எழுத்திலான பரீட்சையும் அமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சையும், வெளியக | விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாத 30 வயதுக்கு மேற்படாத வராக இருத்தல் வேண்டும். அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஊழியர்கள் தொடர்பில் ஆகக்கூடிய |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றி டங்களின் எண் ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் | ஆட்சேர்ப்பு செய்யும் முறை | வயது |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மூன்றாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையும் சித்தியடைதல் வேண்டும். | இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா/த.) பரீட்சையில் சித்தியடைதல்<br>மற்றும்<br>2. க. பொ. த. (உ.தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடமாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) | ஐந்து (05) ஆண்டுகள் நிரந்தர சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியராதல் வேண்டும். சேவைக் காலத்தை நிறுவனத் தலைவர் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும். (வரையறுக்கப்பட்ட விண்ணப்பதாரி களுக்கு) | விண்ணப்ப தாரர்களின் பொருட்டு எழுத்திலான பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும் | வயதெல்லை ஏற்புடையதா காது. |
| 2 | மருந்து கலவையாளர் III | 1 | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (iv) இன் பிரகாரம் பீஎல் 2-2006A ரூபா 12,210 - 10 X 130 - 10 X 145 - 10 X 160 - 12×170- ரூபா 18,600 ஆகும்.<br>(III ஆவது தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 ஆண்டுகள் முடிவடை வதற்கு முன்னர் முத லாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சையும், II ஆவது தரத்திற்கு தரமுயர்வு பெற்று 03 ஆண்டுகள் முடிவடை வதற்கு முன்னர் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும், I ஆவது தரத்திற்கு தரமுயர்வு பெற்று 05 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் மூன்றாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையும் சித்தியடைதல் வேண்டும். | க. பொ. த. (சா.தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இதில் (05) பாடங்களை ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) | **உடற் தகைமை கள்**<br>பதவியில் கடமைகளை நிறை வேற்றுவதற்கு போதியளவு உடல், உள ஆற்றலை கொண்டிருத்தல் வேண்டும்.<br>**அனுபவம் : மட்டப்படுத்திய விண்ணப்பதாரி களுக்கு**<br>(i , அரசாங்கத்தின் ஆயுர்வேத மருந்தகத்தில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்த ஆயுர்வேத மருந்தகத்தில் துறைக்கு ஏற்புடையதான பதவியில் ஓராண்டுக்கு குறையாத சேவை அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் | **திறந்த/ மட்டுப்படுத்திய**<br>உரிய தகைமை களை பூர்த்தி செய்கின்ற விண்ணப்ப தாரிகள் அமைவு முறையிலான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.<br>மட்டுப்படுத்தப் பட்ட விண்ணப்ப தாரர்களிட மிருந்து வெற் றிடங்களை நிரப்புவதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் திறந்த விண்ணப்பதாரி களிடமிருந்து வெற்றிடங்களை நிரப்பப்படும். | விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாத வராக இருத்தல் வேண்டும்.<br>அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஊழியர்கள் தொடர்பில் ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைய தாகாது. |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றி டங்களின் எண் ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் | ஆட்சேர்ப்பு செய்யும் முறை | வயது |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும்.)<br><br>மற்றும்<br><br>(ii) உரிய உள்ளூராட்சி நிறுவனத்தில் ஐந்து (5) ஆண்டுகள் நிரந்தர சேவைக் காலத்தை கொண்டுள்ள பதவியில் நிரந்தரப்படுத்தியுள்ள மற்றும் அக்காலப்பகுதியில் எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படாதவராக இருத்தல் வேண்டும்.<br><br>**வெளியக விண்ணப்பதாரிகளுக்கு**<br><br>அரசாங்கத்தின் ஆயுர்வேத மருந்தகத்தில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்த மருந்தகத்தில் ஓராண்டுக்கு குறையாத காலப்பகுதி துறைக்கு ஏற்புடையதான சேவை அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும். | | |
| 3 | வேலை/ களத் தொழிலாளர் III | 5 | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (iv) இன் பிரகாரம் பிஎல் 1-2006A ரூபா 11,730 - 10 x 120 - 10 x 130- 10 x 145 - 12×160- ரூபா 17,600. (III ஆவது தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் | 8 ஆவது தரம்/ 9 ஆவது ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். | **உடற் தகைமைகள்**<br><br>பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல், உள ஆற்றலை கொண்டிருத்தல் வேண்டும். | **திறந்த**<br><br>உரிய தகைமை களை பூர்த்தி செய்கின்ற விண்ணப் பதாரிகள் அமைவு முறையிலான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். | விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாத |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றி டங்களின் எண் ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் | ஆட்சேர்ப்பு செய்யும் முறை | வயது |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பரீட்சையையும், II ஆவது தரத்திற்கு தரமுயர்வு பெற்று 03 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையையும், 1 ஆவது தரத்திற்கு தரமுயர்வு பெற்று 05 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் மூன்றாவது வினைத்திறன் காண் தடை பரீட்சையையும் சித்தியடைதல் வேண்டும். | | | | வராக இருத்தல் வேண்டும். அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஊழியர்கள் தொடர்பில் ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைய தாகாது. |

02. வியாபார நிலைய கட்டுப்பாட்டாளர் பதவியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் மட்டுப்படுத்திய

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திய டைய வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| பொது அறிவு மற்றும் விவேகப் பரீட்சை | மொழி ஆற்றல், தர்க்க ரீதியான திறன் மற்றும் கணிதம் தொடர்பான திறன் என்பன பரிசோதனை செய்வதற்காக தயாரிக்கப்பட்டதாகும். இவ் வினாத்தாள், பொருளாதாரம், சமூகம், கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், அரசியல், விளையாட்டு துறை என்பன தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக முக்கியமான நடப்பு நிகழ்வுகள் பற்றி பரீட்சார்த்தியின் அறிவை அளவிடுவதாக கொண்டிருக்கும் | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| துறையுடன் தொடர்புடைய அறிவை பரீட்சித்தல் | இவ்வினாத்தாள், உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய பொது வர்த்தக நிலையம், பொது வர்த்தக நிலையங்களின் தொகுதி, வார சந்தை, சுபர் மார்கெட் (பல் பொருள் அங்காடி). இறைச்சி, மீன் விற்பனை நிலையங்களின் நிர்வாகம், கண்காணிப்பு தொடர்பான அடிப்படை அறிவை பரிசோதித்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்தல் பற்றிய அறிவை அளவிடுவதாக கொண்டிருக்கும் | 01 மணித்தியாலம் | 100 | 40% |

(ii) வியாபார நிலைய கட்டுப்பாட்டாளர் பதவியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சைக்கான பாடத்திட்டம் (திறந்த)

| வினாத்தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திய டைய வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| பொது அறிவு மற்றும் பொது விவேகப் பரீட்சை | இவ்வினாத்தாள் மொழி ஆற்றல், தர்க்க ரீதியான திறன், மற்றும் கணிதம் தொடர்பான திறன் என்பன பரிசோதனை செய்வதற்காக தயாரிக்கப்பட்ட தாகும். | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| நடப்பு நிகழ்வுகள் பற்றிய புரிந்துணர்வு | இவ்வினாத்தாள், பொருளாதாரம், சமூகம். கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், அரசியல், விளையாட்டு துறை என்பன தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக முக்கியமான நடப்பு நிகழ்வுகள் பற்றி பரீட்சார்த்தியின் அறிவை அளவிடுவதற்காக தயாரிக்கப்பட்டதாகும். | 01 மணித்தியாலம் | 100 | 40% |

**3. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் :-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு உடன் முன்னரான 03 ஆண்டுகள் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடவாளராக இருத்தல் வேண்டும். பொரலஸ்கமுவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதிவிடவாளர்களின் மீது விசேட கவனம் செலுத்தப்படும்;

(iii) குற்றவியல் சட்டக் கோவையின்கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும்;

(iv) அரசாங்க/மாகாண அல்லது கூட்டுத்தாபன சேவையில் பதவிநீக்கம் செய்யப்பட்டவராகவோ பொது நிர்வாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வுபெற்றவராகவோ இருத்தலாகாது;

(v) விண்ணப்பதாரி சிறந்த நல்லொழுக்கமும், நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(vi) பொரலஸ்கமுவ நகர சபையில் தற்போது அமய/பதிலீட்டு அல்லது கருத்திட்ட மட்டத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள திருப்திகரமான சேவையை கொண்டுள்ளவர்களின் மீது விசேட கவனம் செலுத்தப்படும்;

(vii) விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் இப் பதவிகளுக்கு ஏற்புடையதாக புதிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள், பிரமாணக் குறிப்புக்கள் திருத்தம் செய்தல், பிரமாணக் குறிப்புகளை பதிலீடு செய்தல், ஆட்சேர்ப்புக்களை தாமதப்படுத்தல், மாற்றம் செய்தல் மற்றும் இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்தல் என்பனவற்றின் அதிகாரம் பொரலஸ்கமுவ நகர சபை செயலாளரை சார்ந்திருக்கும்.

**4. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-**

(i) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை, அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(ii) நியமனத் திகதி தொடக்கம் 3 ஆண்டு காலம் தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுதல் வேண்டுமென்பதுடன், பதவி உயர்த்தப்படும் ஊழியர்கள் ஓராண்டு பதில் கடமை காலத்திற்கு உட்படுவார் ;

(iii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டளைகளுக்கும், தாபன விதிக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரசாங்கத் திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் மேல் மாகாண சபையில் அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது பொரலஸ்கமுவ நகர சபையால் அவ்வப்போது வெளியிடப்படும் ஒழுங்குவிதிகள், கட்டளைகள் என்பனவற்றுக்கு அமைவாக பணியாற்றுவதற்கு உட்படுத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க மொழிக் கொள்கைக்கு இணங்குதல் வேண்டும்.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.-** இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் (12" x 8" அளவிலான) விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2015.05.05 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், நகர சபை, பொரலஸ்கமுவ" என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.) உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்பி வைக்க வேண்டுமென்பதுடன், மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் ;
(iii) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக அண்மைக்காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் (பிரதேச செயலாளர் மேலொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்) ;
(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்கள்;
(v) ஏனைய தகைமைகளுக்கான சான்றிதழ்கள்;
(vi) தற்போது சேவையாற்றுவதாக இருப்பின் சேவைச் சான்றிதழ் ;
(vii) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி.

**குறிப்பு** .- இவ்வறிவித்தலினை திருத்தம் செய்தல் அல்லது பிற்போடுதல் அல்லது இரத்துச் செய்தல் ஆகிய எல்லா அதிகாரங்களும் பொரலஸ்கமுவ நகர சபை செயலாளரை சார்ந்திருக்கும்.

செயலாளர்,
நகர சபை,
பொரலஸ்கமுவ.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

மேல்மாகாண அரச சேவையில் பொரலஸ்கமுவ நகர சபையின் வெற்றிடமாகவுள்ள ................................... பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்தல்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. முதலெழுத்துக்களில் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
4. கிராம அலுவலர் பிரிவு இலக்கமும் பெயரும் :-----.
5. நிரந்தர முகவரி :-----.
6. தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் :-----.
7. பால் (பெண்/ஆண்) :-----. திருமணமானவரா/திருமணமாகாதவரா :-----.
8. பிறந்த திகதி :-
ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----.
9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் வயது :-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
10. மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிட காலம் :-----.
11. இலங்கைப் பிரசையா இல்லையா என்பது தொடர்பாக :-----.
12. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சை தொடர்பான விபரங்கள்) :-
(i) சித்தியடைந்த ஆண்டு/தரம் :-----.
(ii) க. பொ. த. (சா./தர.) பரீட்சை :-----.
பரீட்சை சுட்டெண் :-----.
பரீட்சை ஆண்டு மற்றும் மாதம் :-----.

சித்தியெய்திய பாடங்கள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(iii) க. பொ. த. (உ/தர.) பரீட்சை :-

பரீட்சை சுட்டெண் :-----.
பரீட்சை ஆண்டு மற்றும் மாதம் :-----.

சித்தியெய்திய பாடங்கள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

13. தொழில் தகைமைகள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) :----.

14. சேவை அனுபவம் :----.
  (i) தற்போது சேவையாற்றும் நிறுவனம்;
  (ii) தற்போது வகிக்கும் பதவி ;
  (iii) அந்தப் பதவியில் நியமனம் பெற்ற திகதி ;
  (iv) இதற்கு முன்னர் சேவையாற்றிய இடமும் வகித்த பதவியும்.

15. நீங்கள் எப்போதாயினும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா ? :-----.

16. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். மேலும் நான் எந்தவொரு நீதிமன்றத்தாலும் குற்றவாளியாககப்பட்டு தண்டனைக்குள்ளாகவில்லையெனவும், இந்த ஆட்சேர்ப்புத் தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்பட்டால், நியமனம் செய்வதற்கு முன்னர் தகைமையற்றவராக்கப்படுவேன் எனவும், நியமனம் கிடைத்த பின்னர் பதவிநீக்கம் செய்வதற்கு ஆளாவேன் எனவும் அறிவேன்.

.................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பத்தை முன் வைக்கும் திரு./திருமதி/செல்வி........................ என்பவர் தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ...................... ஆகப் பணியாற்றுகின்றார். மேற்படி பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்தவொரு விதத்திலுமான ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கை நீங்கலாக) ஆளாகவில்லை என்பதை உறுதிப்படுத்தி விண்ணப்பத்தை பரிந்துரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

...........................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப்பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் :-----.
(பதவி முத்திரை)
திகதி :-----.

4-704

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**நாத்தாண்டிய பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டம்*

(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நாத்தாண்டி பிரதேச சபையினால் 2014, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதியன்று நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

றொஷான் நிலன்த பெரேரா,
தவிசாளர்,
நாத்தாண்டி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நாத்தாண்டி,
2015, மாச்சு 23.

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின்கீழ் வடமேல் மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் வடமேல் மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 01.12.2011 ஆந் திகதிய 1734/18 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் வெளியிடப்பட்ட பிரதேச சபைகளின் தகனக்கிரியைக் கூடம் ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டணங்கள் அறவிடல், அமங்கள சேவை வழங்கும் இடங்களில் அலுவல்கள் புரிதல், ஒழுங்கமைத்தல் மேற்பார்வை மற்றும் கட்டணங்கள் அறவிடல், அறிக்கைகள் மற்றும் தகவல்கள் சமர்ப்பித்தல், பிரதேச சபைகளில் செயற்குழு அமைத்தல், கூட்டம் நடாத்துதல், பிரத்தியேக இடங்களில் முட்கள் புதர்களின்றி நடாத்துதல், ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல் பற்றிய பிரேரணையுடன் குறைநிரப்பு துணைவிதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து செயன்முறைபடுத்துவதற்கு மேற்குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) உப பிரிவின்கீழ் அங்கீகரிப்பதற்கு நாத்தாண்டிய பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*4-592*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.